மூடுவிழா கண்டிருக்கின்றன. ஆனால், இந்த 13 மில்களையும் மீண்டும் இயக்குவதற்காக, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு உயர்மட்டக் குழுவை தலைமைச் செயலாளர் தலைமையில் அமைத்திருக்கின்றார்கள். அந்த உயர்மட்டக் குழு 3 முறை கூடி ஆய்வு செய்திருக்கின்றது. எந்தெந்த மில்களெல்லாம் மீண்டும் இயக்கப்படலாம் என்பதை அவர்கள் ஆராய்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அறிக்கை சமர்பிக்கவிருக்கிறார்கள். ஆகவே, அந்த அறிக்கையைப் பெற்றவுடன், வருங்காலத்தில் எந்தெந்த மில்களையெல்லாம் இயக்குவதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் இயக்குவதற்கு சிறப்பான முறையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இங்கே தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 466, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

466—

பேருந்து வசதி

***7257—திரு. க. தினகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் ஒன்றியம், வாகராயாம்பாளையம்–கருமத்தம்பட்டி வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கும்பிட்ட கரம் விலகும் முன் வரம் தரும் அன்னை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவிற்கிணங்க (மேசையைத் தட்டும் ஒலி) 10–3–2013 முதல் சூலூர் தொகுதி, சூலூர்–அன்னூர் வழித்தடத்தில் 8 நடைகளும், வாகராயாம்பாளையம்–கருமத்தம்பட்டி–சோமனூர் வழித்தடத்தில் 5 நடைகளும் பேருந்துகள் இயக்கப்பட்டு

வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.*

திரு. க. தினகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதியிலே கடந்த மாதம் முதல் இந்த ஆட்சியிலே,* 12 B *புதிய வழித்தடத்திலே பேருந்து இயக்கப்பட்டிருக்கின்றது. அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அன்னூரிலிருந்து வாகராயாம்பாளையம் வழியாக சூலூருக்கு இரண்டு முறைதான் பேருந்து வருகின்றது. மேலும் அன்னூரிலிருந்து சோமனூர், கருமத்தம்பட்டி வழியாக இரண்டு முறைதான் பேருந்து வருகின்றது. அது போதவில்லை என்பது மக்களுடைய கோரிக்கை. அதை உடனடியாகப் பரிசீலனை செய்து, புதிதாக இன்னொரு பேருந்து இயக்கப்பட வேண்டும். இல்லையெனில் இதையாவது சூலூருக்கு 4 முறையும், அன்னூருக்கு 4 முறையும் இயக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூலூர் தொகுதியில் மக்களுடைய நலன் கருதி கூடுதலான பேருந்து வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, சூலூர் தொகுதியில் மட்டும் 6 புதிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்கிய வரலாறு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11–05

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற வழித்தடங்களில் பயணிகளுடைய எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. அதற்குண்டான பேருந்துகள் தற்போது இயக்கப்பட்டு

2013 மே 10]

வருகின்றன. பயணிகளுடைய எண்ணிக்கை அதிகரிக்கின்றபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவைப்பெற்று கூடுதல் நடைகள், கூடுதல் பேருந்துகள் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

திரு. க. தினகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொள்ளாச்சியிலிருந்து 48B, சுல்தான்பேட்டைக்கு உட்பட்டது, ஐயம்பாளையம் வரை வந்து செல்கிறது. இதனை கம்மாளப்பட்டி வழியாக ஜல்லிப்பட்டி ஊராட்சிக்குத் திரும்பிச் செல்லும்போது ஜல்லிப்பட்டி, கம்மாளப்பட்டி பகுதி மக்கள் பொள்ளாச்சிக்குச் சென்றுவர முடியும். மேலும் தடம் எண் 77, கோவையிலிருந்து சூலூர் ஒன்றியம்—இடையர்பாளையம் வரை வந்து செல்கிறது. அதனை போகம்பட்டி பஞ்சாயத்து–பொண்ணாக்கண்ணி வரை வந்து, திரும்பிச் செல்லும்போது அங்கு படிக்கின்ற மாணவ, மாணவிகள் நடந்து போகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதனைக் கருத்தில்கொண்டு, தொகுதி முழுவதும் இருக்கின்ற பள்ளி மாணவ, மாணவிகள் காலையிலும், மாலையிலும் சென்று வருகின்ற வகையில் அதுகுறித்து ஆய்வு செய்து அனைத்து இடங்களிலும் அந்தப் பேருந்தைச் சீரமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சிறிது நேரத்திற்கு முன்பு, ஒரு துணைக் கேள்வியை நான் கேட்டபோது, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள், சுல்தான்பேட்டை ஒன்றியத்தில் செலக்கரச்சல் பஞ்சாயத்தில் பச்சநாயக்கன்பாளையத்தில் 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்துள்ளது என்பதைக் கூறியபோது, அதனை அப்புறப்படுத்திவிட்டு அப்பகுதியில் புதிதாக நீர்த்தேக்கத்தொட்டி கட்டித் தரப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்ற இலட்சிய நோக்கத்தோடு பொற்கால ஆட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் இருக்கின்ற அனைத்துத் தரப்பு மக்களும், அனைத்துப் பகுதி மக்களும், சீரான பேருந்து வசதிகளைப் பெற வேண்டும் என்பதற்காக 6,000 புதிய பேருந்துகளை வழங்கியிருக்கிறார்கள். எந்தெந்தப் பகுதிகளுக்குப் புதிய பேருந்துகள் இயக்கப்பட வேண்டும் என்றும், வழித்தடம் நீட்டிப்பு செய்யப்பட வேண்டும் என்றும் துறையின் சார்பாக ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற வழித்தடங்களில் கூடுதல் நடைகள் இயக்குவதற்கும், வழித்தடங்கள் நீட்டிப்புக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 467, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

467—

திருத்தேர் சீரமைத்தல்

***20594—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லாநத்தம் ஊராட்சி, அருள்மிகு வரசித்தி விநாயகர், கருப்பனார், செல்லியம்மன் திருக்கோயில் தேரினைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?